Tamilnadu Sugar Co-op Sugar Federation

Chennai-35,Tamilnadu,India

## <u>மறுதாம்பு கரும்பு நிர்வாகம் – கட்டுக்கோப்பு சாகுபடி முறைகள்</u>

### <u>1–வது நாள்:</u>

கரும்பு அறுவடைக்குப்பின் வயலில் உள்ள காய்ந்த சோகைகளை (4–5 டன்) எரிக்காமல் ஆட்களைக்கொண்டு வெளியில் எடுக்கவேண்டும். இச்சோலையினை கம்போஸ்ட் உரம் தயாரிக்க பயன்படுத்தலாம்.

பின்னர் தரைமட்டத்திற்கு மேலே அறுவடை செய்யப்படாமல் உள்ள தூர் பகுதியை கூர்மையான கத்தி (அ) மண்வெட்டி கொண்டு இரண்டு அங்குல ஆழம்வரை சீவி விடவேண்டும். பின்னர் 50 கிலோ யூரியாவை '10' கிலோ வேப்பம்புண்ணாக்கு தூளுடன் கலந்து கட்டைகளின் மீது இட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.

### <u>3–வது நாள்:</u>

கட்டை சீவிய பிறகு கரும்பு பார்களின் இருபுறக்கரைகளையும் மண்வெட்டி (அ) ஏர்மூலம் உடைத்துவிடவேண்டும். இதனால் பழைய வேர்கள் அறுபட்டு. புதிய வேர்கள் விரைவில் தோன்றி பூமியிலுள்ள சத்தை எடுக்க உதவுகின்றது.

### <u>10 – வது நாள்:</u>

ஏக்கருக்கு 2 கிலோ அசிட்டோ பேக்டர் மற்றும் 2 கிலோ பாஸ்போ பேக்டிரின் உயிர் உரங்களை நன்கு மக்கிய தூளாக்கப்பட்ட தொழுஉரத்துடன் கலந்து குழி முறையில் இடவேண்டும்.

## 20– வது நாள்:

நடவுக்கரும்பிற்கு கொடுத்த அளவு உரங்களை கட்டைப் பயிருக்கும் இடவேண்டும். மணிச்சத்து முழுவதையும் (150 கிலோ சூப்பர் பாஸ்பேட்) மூன்றில் ஒரு பங்கு தழைச்சத்து மற்றும் சாம்பல் சத்து முறையே 70 கிலோ யூரியா மற்றும் 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரங்களை குழிமுறையில் இடவேண்டும். யூரியாவுடன் 15 கிலோ வேப்பம் புண்ணாக்கு தூளை 24 மணி நேரத்திற்கு முன் கலந்து பின் இடுவது நல்லது.

## 22–வது நாள்:

மறுதாம்பு கரும்பில் மகசூல் குறைவதைத் தவிர்க்க இடைவெளி நிரப்புதல் மிக மிக அவசியம். மேட்டுப்பாத்தி நாற்றங்கால் (அல்லது) பாலிதீன் பைகளில் வளர்க்கப்பட்ட 25 நாள் வயதுடைய கரும்பு நாற்றுகளைக்கொண்டு இடைவெளி நிரப்பலாம். அல்லது மறுதாம்பு வயலில் குத்தாக உள்ள நன்கு துளிர்த்த தூர்களைப் பெயர்த்து எடுத்துப் பிரித்து நுனி இலையைக் கிள்ளி பின் இடைவெளி நிரப்பலாம்.

## 30 – வது நாள்:

கோடை மாதங்களில் இளங்குருத்துப் புழுவைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 250 மி.லி. கிராணுலோசிஸ் வைரஸ் கலவையை தெரிவிக்கலாம்.

## 40 – வது நாள்:

65 கிலோ யூரியா + 15 கிலோ வேப்பம்புண்ணாக்கு மற்றும் 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரக்கலவையை குழிமுறையில் இடவேண்டும். இரும்பு சத்து பற்றாக்குறையால் கரும்பின் இலைகள் மஞ்சள் நிறமாக இருந்தால் 25 கிராம் பெர்ரஸ் சல்பேட் (அன்னபேதி உப்பு) உப்பை 10 லிட்டர் நீரில் கரைத்து இலை பச்சையாக மாறும்வரை 3–5 நாட்கள் இடைவெளியில் தொடர்ந்து தெளிக்கவேண்டும்.

## 50 – வது நாள்:

ஏக்கருக்கு 2 கிலோ அசிட்டோபேக்டர் மற்றும் 2 கிலோ பாஸ்போ பேக்டிரின் நுண்ணுயிர் உரங்களை 200 கிலோ நன்கு மக்கிய தூளாக்கப்பட்ட தொழு உரத்துடன் கலந்து குழிமுறையில் இட வேண்டும்.

## 60 – வது நாள்:

65 கிலோ யூரியா + 15 கிலோ வேப்பம் புண்ணாக்கு மற்றும் 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரக்கலவையை குழிமுறையில் வயலில் இடவேண்டும்.

## 90 – வது நாள்:

இடை உழவு செய்து பின்னர் உயரமாக மண் அணைத்தல்

## 120 – வது நாள்:

வறட்சி உள்ள இடங்களில் மட்டும் கூடுதல் பொட்டாஷ் ஏக்கருக்கு 50 கிலோ இட வேண்டும்.

### 150, 165, 180, 195, 210 மற்றும் 225– வது நாட்கள்

மேற்கண்ட நாட்களில் இடைக்கணுப்புழுவைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 2 சி.சி. டிரைக்கோ கிரம்மா முட்டை ஒட்டுண்ணி அட்டையை கரும்பு வயலில் பரவலாக கட்டவேண்டும்.

## 150 மற்றும் 210 – வது நாள்:

மறுதாம்பு விட்ட ஐந்தாவது மற்றும் ஏழாவது மாதங்களில் காய்ந்த சோகைகளை உரிக்கவேண்டும். ஏழாம் மாதம் சோகை உரித்தபின் பின்னல் முறையில் கரும்பு தூர்கள் சாயாதவாறு விட்டம் கட்டவேண்டும்.

## 240 மற்றும் 260 – வது நாட்கள்:

வடிகால் வசதி இல்லாமல் தண்ணீர் தேங்கும் இடங்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 200 மி.லி. மாலத்தியான் (அ) எண்டோசல்பான் தெளிக்கவேண்டும்.

## 270 – வது நாள்:

9 வது மாதம் முதல் 15 நாட்களுக்கு ஒருமுறை மட்டுமே கரும்பு வயலில் நீர் பாய்ச்சவேண்டும்.

## 345 – வது நாள்:

நீர் பாய்ச்சுதலை நிறுத்தவேண்டும்.

## 360 – வது நாள் :

கூர்மையான கத்தி (அ) கோடாரி கொண்டு கரும்பு அறுவடை செய்தல்.